இந்த அரசு மக்களுக்கான அரசு. நம் தலைவர் மக்கள் தலைவர். அதைத்தான் நான் இந்த நேரத்தில் மீண்டும் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

“கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி”

என்ற 390–வது குறளின்படி, வேண்டுவோர்க்கு தேவையானவற்றைக் கொடுப்பதும், மாற்றுக் கருத்து உடையவர்களிடத்தில் இனிமையாகப் பேசுவதும், நீதி விளங்க ஆட்சி செய்வதும், மக்களைக் காப்பதும் என்கிற நிலையில் ஒரு சிறந்த ஆட்சி, மக்கள் ஆட்சி, இந்திய ஒன்றியத்தில் பிற மாநிலங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக திகழ்கின்ற ஓர் அரசை நம் மக்கள் தலைவர் மாண்புமிகு தளபதியார் அவர்கள் இன்றைக்கு நடத்திக்கொண்டிருக்கின்றார். மக்களுக்கான திட்டங்களில் இலாப, நஷ்டங்களைப் பார்க்கக் கூடாது என்று மறைந்த தலைவர், நம் உள்ளங்களில் நிறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கின்றார். அதைத்தான் நம்முடைய அவை முன்னவர் அவர்கள் இங்கே தன்னுடைய பதிலிலும் சொல்லியிருக்கின்றார். ஆக, நம்பிக்கை ஒளி உங்களுடைய வார்த்தைகளில் தெரிகிறது. நிச்சயமாக அந்த அணை அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு எதிர்காலத்தில் கிடைக்கும் என்கிற நம்பிக்கையோடு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எங்கள் திண்டுக்கல் மாவட்டத்தின் சார்பிலும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை, உணவுத் துறை அமைச்சர் அவர்களின் சார்பிலும் நான் பணிவோடு நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா, மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

77—

வேளாண்மைக் கல்லூரி

***459—முனைவர் T.R.B. ராஜா:**

மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 ஏப்ரல் 8]

(அ) மன்னார்குடியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா அவர்கள்.*

முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமைவாய்ந்த எங்கள் மன்னார்குடி சட்டமன்றத் தொகுதி, தமிழ்த்தாயின் அழகு முகத்தில், மின்னும் ஒரு மூக்குத்திபோல ஜொலிக்கும் ஒரு தொகுதி. அது முழு மன்னையாக இன்னும் மாற வேண்டுமென்றால், அங்கே வாழும் நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்களுடைய வாழ்வாதாரம் முழுமையாகச் செழிக்க வேண்டும். அந்த நோக்கத்துடன்தான் இன்று, இந்திய ஒன்றியமே போற்றும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கான தனி பட்ஜெட்டை அறிவித்து, அதில் பல முக்கிய திட்டங்களை அறிவித்திருக்கிறார். விவசாயம் செழிக்க வேண்டுமென்றால், விவசாயத்திற்குள் பல இளைஞர்கள் வர வேண்டும். அடுத்த தலைமுறை விவசாயிகளை உருவாக்க நிச்சயமாக வேளாண் கல்லூரிகள் அவசியம். எனவே, கீழ்வேளூரில் தற்போது அறிவித்துள்ளதைப்போல, டெல்டா பகுதியின் மையப் பகுதியான, விவசாயிகள் அதிகம் வாழும் எங்களுடைய மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில், புதிய வேளாண் கல்லூரியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக உருவாக்கித் தர வேண்டுமென்று மீண்டும் ஒருமுறை நான் வலியுறுத்துகிறேன். ஐயா நம்மாழ்வார் அவர்களின் பெயரில் இதனை உருவாக்குவோம் என்ற தேர்தல் வாக்குறுதியும் இருக்கிறது. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். புதிய தொழில்நுட்பங்களை இளைஞர்களுக்கு வழங்க வேண்டும் என்பது கல்லூரிகளின் முக்கிய*

நோக்கம். கல்லூரிகளை உருவாக்கி—நீங்கள் அங்கே special–ஆக புதிய தொழில்நுட்பங்களுக்கு மட்டுமான ஒரு கல்லூரியைக்கூட உருவாக்கலாம். அங்கே Drone technology இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொரு கேள்வி இருக்கிறது. முதலில், இதை முடியுங்கள்.

முனைவர் T.R.B. ராஜா: முடிந்துவிட்டது. Drone technology–க்கு நீங்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால், புதிய KVK–ல் இப்போது இந்தியா முழுக்க Drone–களை வைத்து, agri spraying–க்கான முயற்சியில் ஒன்றிய அரசும் இறங்கியிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னவாறு, வேளாண்மை பட்ஜெட்டில் நீங்களும் அறிவித்திருக்கிறீர்கள். Drones–க்கு தனியாக ஒரு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே, புதிய தொழில்நுட்பங்களை ஊக்குவிக்கும் ஒரு வேளாண் கல்லூரியை நீங்கள் மன்னார்குடியில் நிச்சயமாக அமைத்துத் தர வேண்டுமென்று கோரி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட வேளாண்மைக் கல்லூரியை அவரே தனியாகத் தொடங்கலாம். இருந்தாலும், திருவாரூர் மாவட்டத்திற்கு அருகிலும், அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலும் கிட்டத்தட்ட 11 கல்லூரிகள் இருக்கின்றன. தற்போது 2,000–க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமானால் கிட்டத்தட்ட 110 ஏக்கர் நிலம் வேண்டும். நிலம் இருந்தால்தான் மேற்கொண்டு பணிகளைத் தொடங்கலாம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல கேள்வியைக் கேட்டிருக்கிறார். வேளாண்மைக்கென்று தனி பட்ஜெட் அறிவிக்கப்பட்டிருப்பதால், மக்கள் மத்தியிலும், விவசாயிகள் மத்தியிலும் இந்த அரசின்மீதும், மாண்புமிகு முதல்வர் அவர்கள்மீதும் ஒரு நல்ல எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளை இந்த அரசு மதிக்கின்றது; மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவசாயிகளை மதிக்கின்றார்கள் என்ற உணர்வு

2022 ஏப்ரல் 8]

இருப்பதால்தான் அவர்களின் எதிர்பார்ப்பும் அதிகமாக இருக்கிறது. கிட்டத்தட்ட 15 மாவட்டங்களில் கல்லூரிகள் இல்லை. 28 இணைப்புக் கல்லூரிகள் உள்ளன; 18 உறுப்புக் கல்லூரிகள் உள்ளன. அந்த அடிப்படையில் பார்த்தால் திருவாரூர் மாவட்டத்தில் இந்தக் கல்லூரி இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள் தனியாக ஒரு கல்லூரி தொடங்க வேண்டுமென்றால் அதற்கான அனுமதி அளிப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. அதற்குரிய வாய்ப்பும் அவருக்கு இருக்கிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைத்தால் அவரே கல்லூரி தொடங்கலாம் என்று மற்ற மாண்புமிகு அமைச்சர்களும் சொல்கிறார்கள். இருப்பினும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு விவசாயிகள்மீது தனிப்பட்ட அக்கறை இருக்கின்ற காரணத்தால், அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும். ஒரு கல்லூரி தொடங்க 110 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும். அத்தகைய ஒரு வாய்ப்பு வரும்போது, பிற்காலத்தில் இதுகுறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள். கேள்வி நேரத்தில் இன்னும் 4 கேள்விகள்கூட முடியவில்லை. 42 நிமிடங்கள் ஆகிவிட்டன. கேள்வி கேட்பவர்கள் கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும். அதேபோல், பதில் சொல்பவர்களும் அந்தக் கேள்விக்குத் தகுந்த பதிலை சுருக்கமாகச் சொல்ல வேண்டும். நிறைய உறுப்பினர்கள் கையை உயர்த்தி, துணைக் கேள்வி கேட்க பிரியப்படுகிறார்கள். Live ஆக ஒளிபரப்பப்படுவதால், நிறைய உறுப்பினர்கள் கேள்வி கேட்க விருப்பப்படுகிறார்கள். ஆகவே, அதை மனதில் வைத்து, மூலக் கேள்வி கேட்பவர்களும், துணைக் கேள்வி கேட்பவர்களும், அக்கேள்விகளுக்குப் பதில் சொல்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் அதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா அவர்கள்.

முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Agricultural University bifurcation என்பது தி.மு.க. தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்று. ஆகவே, வேளாண்மைப் பல்கலைக்கழகத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டியது

இப்பொழுது காலத்தின் கட்டாயமாகவும் இருக்கிறது. அண்டை மாநிலமான கர்நாடகாவில் பெங்களூருவில் ஏற்கெனவே University of Agricultural Sciences, இருந்தது. தற்போது UAS, Dharwad என்று பிரிக்கப்பட்டு, மேலும் 3 Universities அங்கே உருவாக்கப்பட்டுள்ளன. Maharashtra மாநிலத்தில் 4 வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. ஆந்திர மாநிலத்தில் 2 வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. இவ்வளவு பெரிய தமிழகத்தில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை மீண்டும் மறுபரிசீலனை செய்யலாம் என்று சொல்லிவிடுங்கள்.

முனைவர் T.R.B. ராஜா: இவ்வளவு பெரிய தமிழகத்தில், விவசாயிகள் அதிகம் வாழும் நமது தமிழகத்தில், மேலும் ஒரு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தை உருவாக்க வேண்டியது அவசியம். அவ்வாறு புதியதாக அமையவிருக்கும் பல்கலைக்கழகத்தை நீங்கள் தயவுகூர்ந்து டெல்டா பகுதியில், குறிப்பாக மன்னார்குடி சுற்றுவட்டாரப் பகுதியில் அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை– உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக ஒரு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும். அதேபோல, அவருடைய தேவையை நிறைவேற்றுவதில் தடையாக அரசுக்கு நிலப் பிரச்சினைதான் இருக்கிறது. ஒரு பல்கலைக்கழகம் தொடங்க வேண்டுமென்றால் அதற்கு அதிகமான நிலம் தேவைப்படுகிறது. கிட்டத்தட்ட 600 ஏக்கர் அளவிற்கு நிலம் வேண்டும். அதுபோன்ற வாய்ப்பு, வசதிகள் வரும்போது, நிதிநிலைக்கேற்ப அதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. அம்பேத்குமார், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.